national secretariat for media reforms - Sri Lanka

ஊடக மறுசீரமைப்புக்களுக்கான தேசிய செயலகம்

மதிப்பீட்டு அறிக்கை : இலக்கம் 01

ஜனவரி 31, 2018

# உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் – பெப்ரவரி 2018

## உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் பற்றிய

## ஊடக அறிக்கையிடலின் மீதான முதலாவது மதிப்பீட்டு அறிக்கை 2018

**அறிமுகம்**

தேர்தல் குறித்த ஊடக அறிக்கையிடலில் ஊடகங்களுக்கான பண்புசார் நடத்தைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதை அறிதலும், தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டுநெறிகள் முறையாகக் கவனத்திற் கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதலும் இந்த மதிப்பீட்டின் இலக்குகளாக அமைந்துள்ளன. பிரஜைகளின் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில், செய்தி அறிக்கையிடல்கள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதையும் இந்த மதிப்பீடு ஆய்ந்தறிகின்றது. மதிப்பீட்டாளர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றத் தளத்தை இந்த அறிக்கை உருவாக்கும் என நம்பப்படுவதுடன், ஒரு செயற்பண்புமிக்க ஜனநாயக சமூகத்தையும், தொழில்சார் ஊடகத்துறையையும் நோக்கியதாகவும் இந்த முயற்சி அமைகின்றது.

இதன்படி, இந்த மதிப்பீடு பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்கிறது : (அ) கருத்து வலுக்கொண்ட, பக்கச்சார்பற்ற, நடுநிலையான செய்திகள் வழியாக வாக்காளர் அறிவுசார் முடிவினை மேற்கொள்வதை உறுதிப்படுத்துதல், (ஆ) கலந்துரையாடல்களுக்கும் விவாதங்களுக்குமான போதிய வெளியும் நேரமும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல், (இ) தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டுநெறிகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துதல், (ஈ) சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிர்ணயங்களையும் ஒழுக்க விழுமியங்களையும் ஊடகத் தொழிற்துறை பின்பற்றிச் செயற்படுவதை உறுதிப்படுத்துதல்.

**முறையியல்**

ஊடகங்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் விரிவாக உள்ளடக்க ஆய்வுவழியாக ஆராயப்படுவதே, இங்கு ஆய்வு முறையியலாக பின்பற்றப்பட்டுள்ளது. தகவல்களை மதிப்பிடுவதற்கான அளவுச் சுட்டிகள் பின்வருமாறு அமைந்தன : தொலைக்காட்சி செய்திகள் மற்றும் கலந்துரையாடல்கள் / விவாதங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் – நிமிடங்களிலும் செக்கன்களிலும், அச்சு ஊடகங்களில் தரப்பட்ட வெளி – சதுர சென்றிமீற்றர்களிலும் என்றவாறாகக் கருத்திற்கொள்ளப்பட்டன. இதன்படி,

சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் நிர்ணயங்களின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு விதித்த வழிகாட்டு நெறிகள் ஊடகங்களால் கடைப்பிடிக்கப்பட்டனவா என்பது எண்சார் மற்று பெறுதிசார் தகவல் ஆய்வின் வழியே ஆய்விற்குட்படுத்தப்பட்டது.

தபால் மூல வாக்களிப்பிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னராக, ஜனவரி 20 – 22 காலப்பகுதியில் இந்த அறிக்கைக்கான தகவல்கள் திரட்டப்பட்டன. பின்வரும் ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகள் பிரதான சிங்கள செய்தி அறிக்கைகளுக்காக அவதானிக்கப்பட்டன – ரூபவாஹினி, ஐ.ரி.என்., சிரச, சுவர்ணவாஹினி, தெரண, ஹிரு. இவற்றோடு, பின்வரும் செய்திப் பத்திரிகைகள் வழியாக அச்சு ஊடகங்கள் வழியான செய்திகள் மற்றும் கலந்துரையாடல்கள் அதே காலப்பகுதியில் ஆய்விற்குட்படுத்தப்பட்டன : லங்காதீப, இரித, திவயின, லக்பிம, மௌபிம, ஜனயுகய, தேசய, ராவய, சிலுமின, ரச, அத ஆகிய மொத்தம் 20 செய்திப் பத்திரிகைகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. செய்திப் பத்திரிகைகளைப் பொறுத்தளவில், அவற்றின் முன்பக்கங்களிலும், தொடர்ச்சிப் பக்கங்களிலும் பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர்பில் அளிக்கப்பட்டிருந்த வெளி, மதிப்பிடப்பட்டிருந்தது.

**அவதானிப்பு**

இந்தப் பயிற்சிக்காக, தொலைக்காட்சி அலைவரிசைகளை அவதானிப்பதற்கு, மொத்தமாக 08 மணி நேரங்களும் 12 நிமிடங்களுமாக ஜனவரி 20,21,22 ஆகிய நாட்களில் செலவிடப்பட்டிருந்தன. அதேபோல, குறித்த காலப்பகுதியில், ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த 20 செய்திப் பத்திரிகைகளில், 44, 320 சதுர சென்ரிமீற்றர்கள் கவனத்திற்கொள்ளப்பட்டன. இதுபற்றிய விரிவான தரவு கீழே தரப்படுகின்றது.

1. **செய்தி உள்ளடக்கம் – தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடகம்**

பல்வேறு அரசியற் கட்சிகளுக்கு செய்திப் பத்திரிகைகளின் முன்பக்கங்களிலும், தொலைக்காட்சி அலைவரிசைகளின் பிரதான செய்தி ஒளிபரப்புக்களிலும் வழங்கப்பட்டிருந்த செய்தி உள்ளடக்க அளவு. (பார்க்க : அட்டவணை 1, இணைப்பு 1)

| All news contained in print media and TV channels | All news | News unrelated to the election | News related to the election | | Representation of individual political parties | | | | News that informs the voter about the election | | News that is related to the election but not relevant to political parties |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Direct | Indirect | SLFP | UNP | SLPP | JVP | Other parties | | |
| News appearing on page 1 of newspapers examined | 206 | 71 | 39 | 96 | 21 | 37 | 26 | 5 | 3 | 13 | 30 |
| News contained in main newscasts of TV channels that were observed | 279 | 65 | | | | | | | | | |
| Total | 485 | 136 | 225 | 124 | 82 | 91 | 65 | 25 | 12 | 19 | 55 |

பல்வேறு அரசியற் கட்சிகளுக்கு செய்திப் பத்திரிகைகளின் முன்பக்கங்களிலும், தொலைக்காட்சி அலைவரிசைகளின் பிரதான செய்தி ஒளிபரப்புக்களிலும் வழங்கப்பட்டிருந்த செய்தி உள்ளடக்க அளவு நூற்றுவீதத்தில். (பார்க்க : வரைபடம் 1, இணைப்பு 2)




(வரைபடம் 1, இணைப்பு 2)

**2. செய்தி உள்ளடக்கம் – தினசரி மற்றும் வார இறுதி செய்திப் பத்திரிகைகள்**

மேற்குறித்த காலப்பகுதியில் அவதானிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த செய்திப்பத்திரிககளின் முதற் பக்கங்களிலும் அவற்றின் தொடர்ச்சியாகவும் வெளிவந்திருந்த 206 செய்திகள் மதிப்பாயப்பட்டன. இவற்றில், 71 செய்திகள் தேர்தலுடன் தொடர்பற்றவையாக இருந்தன. 39 செய்திகள் நேரடியாகத் தேர்தலுடன் தொடர்புள்ளவையாகவும், 96 செய்திகள் மறைமுகமாகத் தொடர்புள்ளவையாகவும் அமைந்திருந்தன. அரசியற் கட்சிகளுடன் செய்திகள் தொடர்புறும் வகையை அட்டவணை (பார்க்க : அட்டவணை 2, இணைப்பு 3) எடுத்துக் காட்டுகிறது.

| Newspaper | All News | News Non Related to the Election | Election Related News | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Direct | Indirect | U.P.F.A | | U.N.P | | S.L.P.P | | J.V.P | | Other Parties | | News that informs the voter about the Election |
| | | | | | Positive | Negative | Positive | Negative | Positve | Negative | Positive | Negative | Positive | Negative | |
| Lankadeepa Daily | 18 | 10 | 4 | 4 | | 2 | | 1 | | 3 | | | | | 1 |
| Lankadeepa Sunday | 10 | 2 | 1 | 7 | | | 1 | 1 | 1 | | | | 1 | | 1 |
| Divayina | 19 | 6 | 3 | 10 | 1 | | 3 | | 2 | 2 | | | | | 1 |
| Divayina Sunday | 8 | | 1 | 7 | | | | 5 | 1 | | | | | | 1 |
| Lakbima | 5 | 2 | 1 | 2 | 1 | | 1 | | | 2 | | | | | |
| Lakbima Sunday | 13 | 7 | 3 | 3 | | 1 | | 1 | 1 | | | | | 1 | 2 |
| Rivra Sunday | 8 | | 4 | 4 | 1 | 2 | | 1 | 2 | | | 1 | | | |
| Rivira | 7 | 1 | 3 | 3 | | | | 2 | 1 | | | | | | 2 |
| Mawbima Sunday | 9 | 2 | 1 | 6 | 1 | | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | | 1 | |
| Mawbima | 10 | 5 | 3 | 2 | 1 | 1 | | 1 | 1 | | 1 | | | | |
| Janayugaya Sunday | 8 | 2 | | 6 | | 2 | 1 | 1 | | | | | | | |
| Janayugaya | 9 | 7 | 1 | 1 | | 1 | | | | | | | | | 1 |
| Deshaya | 8 | | 2 | 6 | 3 | | 3 | 3 | 2 | | | | | | |
| Rawaya | 7 | 1 | | 6 | | | | | | 2 | | | | | |
| Lanka | 7 | 1 | | 6 | | 3 | | 4 | | | | | | | |
| Eththa | 10 | 5 | 2 | 3 | | | | 3 | | | | | | | |
| Dinamina | 23 | 8 | 6 | 9 | 2 | 2 | 2 | | | 3 | | | | | 2 |
| Silumina | 11 | 7 | 1 | 3 | | | | | | | | | | | 1 |
| Resa | 8 | 3 | | 5 | | | | | | 2 | | | | | |
| Ada | 8 | 2 | 3 | 3 | | 1 | | | | | 1 | | | | 1 |
| Amount | 206 | 71 | 39 | 96 | 10 | 11 | 12 | 25 | 14 | 12 | 3 | 2 | 1 | 2 | 13 |

(அட்டவணை 2, இணைப்பு 3)

இணைப்பு 4 இலுள்ள வரைபடம் (2) ஆனது, 20 செய்திப் பத்திரிகளிலும் முன்பக்கங்களில் வெளியான செய்திகளில் அவை தேர்தலுடன் நேரடியான அல்லது நேரடித் தொடர்பற்ற மற்றும் தேர்தலுடன் தொடர்பற்ற செய்திகளின் வகைமைகளை எடுத்துக் காட்டுகிறது. தபால் மூல வாக்களிப்பிற்கு

முன்னரான காலப்பகுதியில், 65.5 % பகுதி (வெளி) தேர்தலுடன் தொடர்புடைய செய்திகளுக்கு வழங்கப்படிருந்தமையை ஆய்வு காட்டுகிறது.




(இணைப்பு 04, வரைபடம் 02)

செய்திப் பத்திரிகைகளின் முன்பக்க உள்ளடக்கங்களை ஆய்வு செய்தபோது, சில செய்திப் பத்திரிகைகள் பக்கஞ்சாராமலும், சில அரசியற் கட்சியொன்றுக்குச் சார்பாகவும், மற்றயவை ஏதாவது அரசியற் கட்சிக்கு தீங்குபயப்பனவாகவும் செய்திகளை அறிக்கையிட்டிருந்தன.

எண்சார் வழியில் ஆய்வு செய்தபோது, செய்திப் பத்திரிகைகளில் அரசியற்கட்சிகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தமையை அறியமுடிந்தது. சமமான வெளி அவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த அரசியற்கட்சிக்கு நேர்மறைத் தாக்கத்தைத் தருவதாகவே அவ்வெளி பயன்படுத்தப்படிருந்தமையையும் தர்க்கரீதியான பார்வையின் மூலம் அறியமுடிந்தது. (பார்க்க : அட்டவணை 3, இணைப்பு 5)




(அட்டவணை 3, இணைப்பு 5)

**முன்பக்கங்களில் வெளியான செய்திகளின் பிரகாரம், அரசியற் கட்சியொன்றுக்கு அது சாதகமாக அல்லது பாதகமாக அமையும் விதம். (அட்டவணை 4, இணைப்பு 6)**

**3. செய்தி உள்ளடக்கம் – தொலைக்காட்சி இரவு நேர பிரதான செய்தி ஒளிபரப்புக்கள்**

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள், 279 செய்திகள் அவதானிக்கப்பட்டன. இவற்றில், 65 செய்திகள் தேர்தலுடன் தொடர்பற்றவையாக இருந்தன. 214 செய்திகள் தேர்தலுடன் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புபட்டிருந்தன. (இணைப்பு 06)

| Channel | Total News Items | News Non Related to the Election | Election Related /Direct-Indirect | U.P.FA | U.N.P | S.L.P.P | J.V.P | Other News | News that informs the voter about the election |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| National Television | 69 | 10 | 59 | 17 | 16 | 12 | 6 | | 1 |
| ITN | | | | | | | | | |
| Sirasa | 31 | 3 | 28 | 10 | 4 | 4 | 4 | 9 | |
| Swarnavahini | 47 | 26 | 21 | 4 | 10 | 5 | 1 | | 1 |
| Derana | 38 | 6 | 32 | 6 | 7 | 9 | 2 | | |
| Hiru | 38 | 10 | 28 | 7 | 4 | 6 | 3 | | 1 |
| Amount | 279 | 65 | 214 | 65 | 61 | 39 | 20 | 9 | 6 |

வரைபடம் 4, இணைப்பு 7 – அரசியற்கட்சிகளுடன் செய்திகள் கொண்டிருந்த தொடர்பைக் காட்டுகின்றது.




(வரைபடம் 4, இணைப்பு 7)

வரைபடம் 5, இணைப்பு 8 – ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் செய்திகள் இடம்பெற்றிருந்த தன்மைகளைக் காட்டுகின்றது. தேர்தலுடன் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புபட்ட செய்திகளுக்கே அலைவரிசைகள் அதிக நேரத்தை அளித்திருந்தமையை வரைபடம் இனங்காட்டுகின்றது.




(வரைபடம் 5, இணைப்பு 8)

அட்டவணை 6, இணைப்பு 9 ஆனது தொலைக்காட்சி அலைவரிசைகளின் இரவு நேர பிரதான செய்தி ஒளிபரப்புக்களில் அரசியற்கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட வகையைக் காட்டுகிறது. இவற்றில், சில அரசியற்கட்சிகளுக்கு ஒப்பீட்டளவில் அதிக நேரமும் ஏனையவற்றுக்கு குறைவான நேரமும் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.




| | National Television | I T N | Sirasa | Swarnavahini | Derana | Hiru |
|---|---|---|---|---|---|---|
| J.V.P | 6 | 4 | 4 | 1 | 2 | 3 |
| S.L.P.P | 12 | 3 | 4 | 5 | 9 | 6 |
| U.N.P | 16 | 13 | 4 | 10 | 7 | 4 |
| U.P.F.A | 17 | 17 | 10 | 4 | 6 | 7 |

(அட்டவணை 6, இணைப்பு 9)

தொலைக்காட்சிகளில் ஒதுக்கப்பட்ட நேரமானது, வரைபடம் காட்டுவது போல, ஒவ்வொரு அலைவரிசைகளுக்கும் வேறுபட்டதாக அமைந்திருந்தது. சில அலைவரிசைகள், தமக்கு விருப்பமான அரசியற்கட்சிகளின்பால் அதிகச் செய்திகளை வழங்கியிருந்தமை, பாகுபாட்டினை எடுத்துக்காட்டுவதாயிருந்தது.

**ஊடகங்கள் மீதான தேர்தல் நெறிமுறைகளின் பிரயோகம் தொடர்பிலான பொது அவதானம்**

தேர்தல்கள் ஆணைக்குழுவானது, டிசம்பர் 4, 2017 அன்று, 2048/1 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலை ஊடகங்களுக்கான நெறிமுறைகள் தொடர்பில் வெளியிட்டிருந்தபோதிலும், செய்திப் பத்திரிகைகளோ தொலைக்காட்சி அலைவரிசைகளோ அவற்றைக் கடைப்பிடிப்பதில் தீவிர கரிசனை எதனையும் காட்டவில்லையென்பதையே, அவற்றை அவதானித்ததன்பேரில் வெளிப்பாட்டுக்கு வந்தது.

(1) **'ஒரு கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ தீங்கு பயப்பதாகவோ அல்லது பிரத்தியேக முன்னுரிமையை வழங்குவதாகவோ அமையாது ஊடகங்கள் அவசியம் செயற்படவேண்டும்'** என்று, தேர்தல்கள் ஆணைக்குழுவின் இரண்டாவது நெறிமுறை கூறுகிறது. செய்திப் பத்திரிகைகளோ அல்லது தொலைக்காட்சி அலைவரிசைகளோ இதனைக் குறிப்பாகக் கவனத்திற் கொள்ளவில்லை என்பதை மதிப்பீடு சுட்டிக்காட்டுகிறது. எவ்வாறாயினும், தாம் உருவாக்கியிருக்கக்கூடிய கருத்து நிலையிலிருந்து அவற்றால் வெளியே வரமுடியவில்லை. அரசியற்கட்சிகளும் வேட்பாளர்களும் சமமான நேரத்தையும் வெளியையும் பெறுவதான தோற்றப்பாடு காட்டப்படுகின்ற அதேவேளையில், சில அரசியற் கட்சிகளையும் வேட்பாளர்களையும் நேர்முகமாக அல்லது எதிர்மறையாக சித்திரிப்பதாக அவை தந்திரோபாயங்களையும் கைக்கொண்டிருந்தன. (பார்க்க : தொலைக்காட்சி தொடர்பில் முடிவுக்குறிப்பு 01 மற்றும் அச்சு ஊடகம் தொடர்பில் முடிவுக்குறிப்பு 02)

(2) **நிகழ்வொன்றில் பாதிக்கப்பட்டு, ஊடகத்தில் அது தொடர்பில் அறிக்கையிடப்பட்ட ஒரு தரப்பிற்கு / நபருக்கு தனது எதிர்வினையை எடுத்துச்சொல்லும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்** என்ற நெறிமுறை (இலக்கம் 06) அலட்சியப்படுத்தப்பட்டிருப்பதையும், மீறப்பட்டிருப்பதையும் அவதானிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. (பார்க்க : முடிவுக்குறிப்பு 03)

(3) **தேர்தல் காலத்தில் ஜனாதிபதியோ, பிரதமரோ, அமைச்சர் எவருமோ ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தால், அது, அந்த நபர் சார்ந்த அரசியற் கட்சிக்கு வழங்கப்பட்ட நேரம் / வெளியாகவே கருதப்படவேண்டும்.** இதன்படி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் / உறுப்பினர்களும் அவ்வாறான சந்தர்ப்பங்களைப் பெறக்கூடியவர்களாவர். ஆனாலும், இந்த நெறிமுறையும் (இலக்கம் 10) மீறப்பட்டிருக்கிறது. (பார்க்க : முடிவுக்குறிப்பு 04)

(4) **மதம், இனம், பண்பு, மொழி, சாதீயம் முதல்ய விடயங்களை முன்னிலைப்படுத்துவதன் வழியாக இலங்கையர்களிடையே சகிப்புத்தன்மையற்ற நிலையையும் பகையுணர்ச்சியையும் உருவாக்குவதிலிருந்து ஒவ்வொரு ஊடக நிறுவனமும் விலகியிருப்பது அவசியம்** என நெறிமுறை (22) கூறுகிறது. ஆனாலும் – மதம், இனம், மொழி, சாதீயம் சார்ந்த நேர்மறைச்

சித்திரிப்புக்களைக் கொண்ட, மறைமுகமாக இவற்றைப் பேசிய அறிக்கைகளை மதிப்பீட்டாளர்கள் தமது ஆய்வில் எதிர்கொண்டிருந்தனர். (பார்க்க : முடிவுக்குறிப்பு 05)

(5) இந்த தேர்தலானது, வட்டார முறையினையும் விகிதாசார முறையினையும் இணைத்த கலவன் முறையில் நடத்தப்படுகிறது. ஆனாலும், இந்த முறை பற்றிய அறிவினை வாக்காளர்களிடம் எடுத்துச் செல்வதில் ஊடகங்களிடம் குறைந்த முனைப்பையே காணமுடிந்தது. ஊடகங்களை மதிப்பிட்டபோது, அச்சு ஊடகங்களாயினும் சரி தொலைக்காட்சி அலைவரிசைகளாயினும் சரி இந்த அறிவூட்டல் தொடர்பில் மிகக் குறைந்த கரிசனை கொண்ட சில நடவடிக்கைகளையே மேற்கொண்டிருந்தமையை இனங்காண வழியேற்பட்டது. (முடிவுக்குறிப்பு 06)

(6) பால் நிலைச் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, 25 சதவீத இடங்கள் பெண்களுக்குரியதாகக் கொண்டமைந்ததாக உள்ளூராட்சிச் சபைகள் அமையவேண்டும் என்பதற்காக, வேட்பாளர் பட்டியலும் அவ்வாறான விகிதாசாரத்தைப் பேண வேண்டும் என்பது, முதற்தடவையாகக் கட்டாயமாக்கப்பட்டது. அரசாங்கம் நடத்தும் தொலைக்காட்சிகள் பெண் வேட்பாளர்களின் தேர்தல் கூட்டங்களை உள்ளடக்கியிருந்தாலும், செய்தி அறிக்கைகளில் பெண்களுக்கு வழங்கப்பட்ட நேரம் திருப்தி நிலைக்கு வெகு தூரத்திலேயே காணப்பட்டதை ஆய்வில் அறியமுடிந்தது. (பார்க்க : முடிவுக்குறிப்பு 07)

(7) வழிமுறை இலக்கம் 27, ஊடக ஒழுக்க நெறிகள் தேர்தல் அறிக்கையிடல்களில் பின்பற்றப்பட வேண்டும் என்பதைக் கூறி நிற்கிறது. ஆனாலும், இதனை அச்சு ஊடகங்களோ தொலைக்காட்சிகளோ கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. சில அறிக்கையிடல்களில், செய்தி மூலங்கள் குறிப்பிடப்படாமலிருந்ததை, உள்ளடக்க ஆய்வுகளை மேற்கொண்ட தரவு ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். சில சமயங்களில், விவாதங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய அறிக்கையிடல்களில், யார் அந்தச் செய்திகளைத் தந்தது என்ற விபரம் காணக்கிடைக்காததாக இருந்தது. வேறு சில, அரசியல் விடயங்களையே அதிகம் பேசுவதாகவும், வேட்பாளர்களின் தனிப்பட்ட பண்புகளை விவாதிப்பதாகவும் அமைந்திருந்தன. (பார்க்க : முடிவுக்குறிப்பு 08)

**முடிவுக் குறிப்புக்கள்:**

1. அட்டவணை இலக்கம் 06 இனை உசாத்துணையாகக் கொண்டு : இங்கு தரப்பட்ட தரவுகளுக்கும் மேலதிகமாக, தனியார் அலைவரிசை ஒன்றினால், பிரதமர் நேர்மறையாகச் சித்திரிக்கப்படிருந்தமை தெளிவாக இருந்தது. மறுபக்கத்தில், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழான தொலைக்காட்சி அலைவரிசைகள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினது பொருத்தப்பாடற்ற புகைப்படங்களையும், ஒலிக்குறிப்புக்களையும் தெரிவுசெய்திருந்தன.
2. பார்க்க : அட்டவணை 03
3. ‘அத’ செய்திப் பத்திரிகை, ஜனவரி 22 இதழில் ‘ரோஸி தனது கட்சிக்குள்ளேயே மறைமுக எதிர்ப்பை எதிர்கொள்கிறார்’ என, ஐ.தே.க. வின் கொழும்பு மேயர் வேட்பாளர் ரோஸி சேனநாயக்கவை நேரடியாகப் பெயர்சுட்டி அறிக்கையிட்டிருந்தது. ஆனால், இந்தச் செய்தியில், அவரின் பார்வை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
4. வரைபடம் 03, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தொடர்பிலான 126 செய்திகள் உட்பட, 214 செய்திகளை அடையாளங்காட்டுகின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஜே.வி.பி. தொடர்பில் அத்தகைய எண்ணிக்கையான செய்திகள் இடம்பெறவில்லை. ஆய்வாளர்கள் இது தொடர்பில் தெளிவுபடுத்தலுக்குக் கோரியபோது, ஜனாதிபதி மற்றும் பிரதமர் தொடர்பிலேயே அதிக பிரபல்யம் வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
5. மதிப்பீடு இடம்பெற்ற மூன்று நாட்களிலும், ஊவா மாகாண முதலமைச்சர் முன்னிலையில் பாடசாலை அதிபர் ஒருவர் முழந்தாளிடச் செய்யப்பட்டமை தொடர்பிலான செய்தியே தொலைக்காட்சிகளிலும் அச்சு ஊடகங்களிலும் முதன்மைச் செய்தியாக இருந்தது. பல செய்திகள் குறித்த அதிபரின் தேசிய இனத்தை முன்னிலைப்படுத்துவதாகவே அமைந்திருந்தன. ( திவயின, ஜனவரி 22 இல் அறிக்கையிட்டிருந்தபோது இத்தேசிய இன முன்னிலையை உள்ளடக்கி அறிக்கையிட்டிருந்த போதிலும், லக்பிம மற்றும் அத பத்திரிகைகள் அவ்வாறான முதன்னிலைப்படுத்தலை வழங்கியிருக்கவில்லை)
6. வரைபடம் 02, அச்சு ஊடக அறிக்கையிடல்களை காட்டும்போது, வரைபடம் 03, தொலைக்காட்சி அறிக்கையிடல்களைக் காட்டுகின்றது. அறிவூட்டும் வகையிலான செய்தி அறிக்கைகள், இவ்வகையில், முறையே 13 செய்திகளையும் 06 செய்திகளையும் கொண்டிருந்தன.
7. ரூபவாஹினியில் 22 ஆம் திகதிய செய்தி ஒளிபரப்பில், பெண் வேட்பாளர்கள் பற்றிய விசேட விவரணம் ஒன்று இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. வேறெந்த தொலைக்காட்சி அலைவரிசைகளும் தமது செய்தி ஒளிபரப்புக்களில் இவ்வாறான அறிவிப்பை விடுத்திருக்கவில்லை. பெண்களை அறிமுகப்படுத்தும் அல்லது அவர்களது பார்வைகளைத் தரும் நிகழ்ச்சிகள் பற்றி, தொலைக்காட்சி அலைவரிசைகள் எவ்வகையான முன்னாயத்தங்களையும் கொண்டிருக்கவில்லை என்பது, இந்த ஆய்வுக் காலப்பகுதியில்

தெளிவானது. உதாரணமாக, ஜனவர் 22 இல், ஐ.ரி.என். இல் ஒளிபரப்பான ‘அரசியல் விவாதம்’ நிகழ்ச்சியில், பெண் ஒருவர் கூட உள்வாங்கப்படவில்லை.

8. சிலுமின செய்திப் பத்திரிகை, ஜனவரி 21 இல், சீனிக் கூட்டுத்தாபனம், தெளிவான இலாபத்தைப் பெற்றிருப்பதாக அறிக்கையிட்டிருந்தது. இந்தச் செய்தி தேர்தலுடன் மறைமுகத் தொடர்பைக் கொண்டிருந்ததுடன், இத்தகவலை வெளியிட்டவராக தொழில்கள் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இச்செய்தியைத் தந்தவர் / எழுதியவர் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஜனவரி 21 இல், இரித திவயின அறிக்கையிடலில், ஐ.தே.க. அமைச்சர் ஒருவர், ஜனாதிபதிக்கு அவரது பதவிக்கால நீடிப்பு குறித்து ஆலோசனை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அங்கும் அச்செய்தியைத் தந்தவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இச்செய்திக்கு மூலமும் இல்லாதிருந்தது. இச்செய்தி தேர்தலுடன் மறைமுகத் தொடர்பையும் கொண்டிருந்தது.